வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 4.2.2026 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

- குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று ஒடிசா மாநிலத்தில், தமது சொந்த ஊரான ராய்ரங்பூரில், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

- பிரிக்ஸ் நாடுகளின் தொழில் நிறுவனங்களுக்கு ஒருங்கிணைந்த முறையில் ஆதரவு சேவைகளை வழங்குவதற்கான பிரிக்ஸ் தொழில்திறன் மையத்தில், இந்தியா தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

- மாவட்டம் தோறும் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு போன்ற திட்டங்களால், புற்று நோயாளிகளுக்கு பெரிய ஆறுதல் கிடைத்திருப்பதாக, மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜே பி நட்டா கூறி உள்ளார்.

- புதுச்சேரியில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்ப தலைவிகளுக்கு உயர்த்தப்பட்ட நிதி உதவி வழங்கும் பணிகளை, துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் நாளை தொடக்கி வைக்க உள்ளனர்.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, 6 நாள் ஒடிசா பயணத்தின் ஒரு பகுதியாக மயூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ள தமது சொந்த ஊரான ராய்ரங்பூரில், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். குடியரசு தலைவரின் பயணம் குறித்து ஒரு தொகுப்பு..........

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, ராய்ரங்பூரில் உள்ள எஸ்எஸ்டி உயர்நிலைப் பள்ளியின் பவளவிழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார். ஒடிசாவில் பழங்குடியினத்தை சேர்ந்த முதலாவது அமைச்சராக பதவி வகித்த பஞ்ச்பீர் சோரேனின் உருவச் சிலையை, நிகழ்ச்சியின் போது அவர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, ராய்ரங்பூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்வேறு வளர்ச்சி திட்டங்களை குடியரசு தலைவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். புதிய ஆயுஷ் மையம், வில்வித்தை பயிற்சி மையம், ஆகிய வசதிகள் இதில் அடங்கும். பிராந்திய அளவிலான முன்னேற்றத்தையும், உள்ளூர் பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும், நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் வலியுறுத்தினார்.

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, முன்னதாக ராய்ரங்பூர் பூர்ணேஸ்வர மகாதேவர் கோலிலில் வழிபட்டார். இன்று காலை பூரி ஜெகன்னாதர் கோவிலில் அவர் தமது முன்னோர்களுக்கு, பிண்டப் பிரதானம் செய்தார்.

*மக்களவை தீர்மானம்*

மக்களவையில், குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் மீதான விவாதங்கள் இன்று தொடர்ந்து இடம் பெற்றன. 2-ஆவது ஒத்திவைப்பிற்கு பின்னர், பிற்பகல் 2 மணிக்கு அவை கூடிய போது, தெலுங்கு தேசம் கட்சி எம்பி திரு பாலயோகி விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் போட்டித் திறனை வலுப்படுத்துவதற்கான வரைபடமாகவே, குடியரசு தலைவர் உரை அமைந்திருப்பதாக பாராட்டினார். காங்கிரஸ் ஆட்சியின் போது ஊழல் அதிகம் இருந்ததாக, பிஜேபி உறுப்பினர் திரு நிஷிகாந்த் துபே, விவாதங்களின் போது குற்றம் சாட்டினார். நேரு- இந்திரா குறித்த புத்தகங்களை அவர் மேற்கோள்காட்டி பேசிய போது, தீர்மானம் தொடர்பாக மட்டுமே அவையில் பேசுமாறு அவைத் தலைவர் அறிவுறுத்தினார். எதிர்கட்சிகளின் அமளிக்கு இடையில் மக்களவையின் அலுவல்கள் மாலை 5 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டன.

*மாநிலங்களவை-தீர்மானம்*

மாநிலங்களவையில், குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் மீதான விவாதங்கள் இன்று தொடர்ந்து நடைபெற்றன. குடியரசு தலைவரின் நாடாளுமன்ற உரை, இந்தியாவின் வளர்ச்சிக் கதையை சரியாக விவரித்து, அனைவர்க்கும் உணர்வூக்கம் அளிக்கும் வகையில் அமைந்திருப்பதாக, அவை முன்னவரும் மத்திய அமைச்சருமான திரு ஜேபி நட்டா, விவாதங்களில் பங்கேற்று பேசுகையில் கூறினார். அமிர்த கால உணர்வுகளின் வடிவமாகவே அமைந்துள்ள இந்த உரையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் சாதனைகளும் விளக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் பயணத்தில் பாரம்பரிய மரபுகளுக்கு முக்கிய இடம் இருக்கும் என்பதையும் குடியரசு தலைவர் வலியுறுத்தி இருப்பதாக அவர் கூறினார்.

மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜுனகார்கே விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில், நாட்டில் சமூக நீதியும் நல்லிணக்கமும் குலைந்து விட்டதாக குற்றம் சாட்டினார். பெண்களுக்கான இடஒதுக்கீடுகளை அரசு ஏன் அமல்படுத்வில்லை என அவர் வினவினார். பெண்கள் மற்றும் அட்டவணை பிரிவினருக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதாகவும் மணிப்பூர் வன்முறையின் போது மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

*பிரிக்ஸ்*

பிரிக்ஸ் நாடுகளின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் சிறு-குறு-நடுத்தர தொழில் துறையினருக்கு ஒருங்கிணைந்த முறையில் ஆதரவு சேவைகளை வழங்குவதற்கான பிரிக்ஸ் தொழில்திறன் மையத்தில், இந்தியா தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. மத்திய தொழில்-வர்த்த அமைச்சகம் சார்பில் புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், இந்த இணைப்பு மேற்கொள்ளப்பட்டது. பிரிக்ஸ் தொழில் திறன் மையத்தில் இந்திய மையமாக, தேசிய உற்பத்தி திறன் கவுன்சில் நியமிக்கப் பட்டுள்ளதாகவும், நவீன உற்பத்தி முறைகளை உருவாக்கி பிரிக்ஸ் நாடுகளில் அமல்படுத்துவதற்கான இந்தியாவின் முயற்சிகளை, இம்மையம் முன்னெடுத்துச் செல்லும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*சாலை-மேம்பாடு*

சேலம்-குமாரப்பாளையம் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவை 6 வழிப் பாதையாக மாற்றும் திட்டம் உட்பட, நாட்டின் 6 முக்கிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டங்களின் அமலாக்கம் குறித்து மத்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை, NPG என்னும் கூட்டுத் திட்டமிடல் குழுவுடன் இணைந்து, மறுஆய்வு மேற்கொண்டது. இத்திட்டங்கள், பிரதமரின் கதி சக்தி-தேசிய மாஸ்டர் திட்டத்தின் இலக்குகளுக்கு ஏற்ப, மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்து

இக்கூட்டத்தின் போது ஆராயப்பட்டது. நெடுஞ்சாலை திட்டங்களின் திறம்பட்ட அமலாக்கம் மூலம், நாட்டில் போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்தி பயண நேரத்தைக் குறைக்கவும், சம்பந்தப்பட்ட பகுதிகளில் பிராந்திய அளவிலான பல்வேறு சமூக பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தவும், ஏதுவாகும் என்று, மத்திய தொழில்-வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*நட்டா*

உலக புற்றுநோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இதை ஒட்டி, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜேபி நட்டா சமூக ஊடகத்தில் இன்று வெளியிட்டுள்ள செய்தி குறித்து ஒரு தொகுப்பு ……

நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அமைக்கப்பட்டு, முக்கிய கேன்சர் மருந்துகளுக்கு சுங்க வரி விலக்கும் அளிக்கப்பட்டுள்ளதால், புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகப் பெரிய ஆறுதல் கிடைத்திருப்பதாக, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜேபி நட்டா, உலக புற்று நோய் தின செய்தியில் கூறி உள்ளார். புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதில், மத்திய அரசின் ஆயுஷ்மான் ஆரோக்ய மந்திர்கள், முக்கிய பங்களித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புற்று நோய்க்கு எதிரான போராட்டத்தில் தனிப்பட்ட நபர்களின் அனுபவங்கள் வெவ்வேறானவை என்பதால் தனிப்பட்ட நோயாளிகளின் தேவைகளுக்கு ஏற்ப சிகிச்சை முறைகள் அமைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில். தனித்துவத்தால் ஒற்றுமை என்ற கருப்பொருள் அடிப்படையில், இவ்வாண்டு உலக புற்றுநோய் தினம் கடைபிடிக்கப் படுகிறது.

*காங்கிரஸ்-பிஜேபி*

மக்களவை எதிர்கட்சி தலைவரும் மூத்த காங்கிரஸ் தலைவருமான திரு ராகுல்காந்தி, சீக்கிய சமூகத்தினரை அவமதிப்பதாக, பிஜேபி குற்றம் சாட்டி உள்ளது. திரு ராகுல்காந்தி நாடாளுமன்ற வளாகத்தில் பிஜேபி எம்பி சர்தார் ரவ்னீத் சிங் பிட்டு-விற்கு எதிராக அவதூறு வார்த்தைகளை பயன்படுத்தியதாக, மூத்த பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ஹர்தீப் சிங் புரி புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். நாடாளுமன்ற அலுவல்களை காங்கிரஸ் தடைபடுத்துவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

*ரங்கசாமி-திட்டம்*

புதுச்சேரியில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை சார்பில், திருக்காஞ்சியில் நாளை மாலை நடைபெற உள்ள விழாவில், முதியோர்-ஆதரவற்றோர் ஓய்வூதியத் திட்டம், மற்றும், வறுமைக்

கோட்டிற்கு கீழே உள்ள குடும்ப தலைவிகளுக்கான மாதாந்திர நிதி உதவித் திட்டத்தில், உயர்த்தப்பட்ட நிதி உதவி வழங்கும் பணிகளை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திருரங்கசாமி ஆகியோர் தொடக்கி வைக்க உள்ளனர். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு லட்சுமி நாராயணன், திரு ஜெயக்குமார், திரு திருமுருகன், திரு ஜான்குமார், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு ஏகேடி ஆறுமுகம், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, மக்களவை உறுப்பினர் திரு வைத்திலிங்கம், மற்றும், தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் விழாவில் பங்கேற்ற உள்ளனர்.

*புதுச்சேரி-டிரோன்*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், நில அளவைப் பதிவுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான, நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையின் புதிய, நவீன திட்டத்தின் கீழ் காரைக்கால் மாவட்டத்தில் ட்ரோன் மூலமான நில அளவைப் பணிகளை, குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு திருமுருகன் இன்று தொடக்கி வைத்தார். நில அளவைத் துறையின் உதவி இயக்குநர் திரு சந்துரு மற்றும் இதர அதிகாரிகள் உடன் இருந்தனர். இத்திட்டம் மூலம் சேகரிக்கப்படும் தெளிவான, இடம் சார் தரவு தொகுப்புகளால், நகர்புற திட்டமிடல், உள்கட்டமைப்பு மேம்பாடு, நில நிர்வாகம் மற்றும் சுற்றுச்சூழல்

கண்காணிப்பு தொடர்பான முடிவுகளை திறம்பட்ட முறையில் மேற்கொள்ள ஏதுவாகும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*வானிலை*

இன்றும், நாளையும், தென் தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகம் மற்றும் புதுச்சேரியின் இதர பகுதிகளில், வறண்ட வானிலை நிலவும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நீலகிரி, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகாலை வேலையில் மிதமான பனிமூட்டம் காண்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, மற்றும், குமரிக் கடல் பகுதிகளில், மணிக்கு 60 கிலோமீட்டர் வரையிலான வேகத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இன்றும் நாளையும் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், கொடைக்கானலில், 7.1 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது. சமவெளிப் பகுதிகளைப் பொறுத்த வரை, குறைந்த பட்சமாக ஈரோட்டில், 17 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி உள்ளது.

*நீட்-தேர்வு*

நீட்-பிஜி தேர்வில் தகுதி பெறுவதற்கான கட்-ஆப் மதிப்பெண் குறைக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீது மத்திய அரசுக்கும், மருத்துவ அறிவியல் தேர்வுகளுக்கான தேசிய வாரியம், மற்றும், தேசிய மருத்துவ ஆணையத்திற்கும் நோட்டீஸ் அனுப்ப உச்சநீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. பிரச்சனையில் அடுத்த கட்ட விசாரணை வரும் வெள்ளிக் கிழமைக்கு ஒத்தி வைக்கப்படுவதாக, நீதிபதி திரு பி எஸ் நரசிம்மா, திரு அலோக் அராதே ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று உத்தரவிட்டது. நாடு முழுவதும் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட, முதுகலை மருத்துவ மேல்படிப்பு இடங்கள் காலியாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, நீட் பிஜி கட்-ஆப் மதிப்பெண் குறைக்கப்பட்டதை ஆட்சேபித்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*திருப்பதி-லட்டு*

திருப்பதி கோவில் லட்டு பிரசாதம் தயாரிப்பதற்கான நெய் கொள்முதல் தொடர்பான பிரச்சனைகளை ஆராய, ஆந்திர அரசு, குறுகிய கால அடிப்படையில், நிர்வாக குழு ஒன்றை அமைக்க தீர்மானித்துள்ளது. நெய் கொள்முதலில் முறைகேடு நடந்த தாக கூறப்படுவது குறித்து விசாரித்து, சிறப்பு புலனாய்வுக் குழுவினர் கொடுத்துள்ள அறிக்கையை நிர்வாக குழு ஆராயும் என்று, ஆந்திர நிதியமைச்சர் திரு பய்யாவுல கேசவ் இன்று விஜயவாடாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

பிரச்சனையில் வெளிப்புறத் தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் செயல்பட அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், நிர்வாக கமிட்டியின் பரிந்துரைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,அமைச்சர் மேலும் கூறினார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று ஒடிசா மாநிலத்தில், தமது சொந்த ஊரான ராய்ரங்பூரில், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

பிரிக்ஸ் நாடுகளின் தொழில் நிறுவனங்களுக்கு ஒருங்கிணைந்த முறையில் ஆதரவு சேவைகளை வழங்குவதற்கான பிரிக்ஸ் தொழில்திறன் மையத்தில், இந்தியா தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.

மாவட்டம் தோறும் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு போன்ற திட்டங்களால், புற்று நோயாளிகளுக்கு பெரிய ஆறுதல் கிடைத்திருப்பதாக, மத்திய சுகாதார அமைச்சர் திரு ஜே பி நட்டா கூறி உள்ளார்.

புதுச்சேரியில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்ப தலைவிகளுக்கு உயர்த்தப்பட்ட நிதி உதவி வழங்கும் பணிகளை, துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் நாளை தொடக்கி வைக்க உள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------------